# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

***(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி அமைச்சர் அவர்களால் 2017, மாச்சு மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***168 ஆம் சட்டமூலம்*** ]


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 28.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

2-PL 005081 -475 (2017/03)

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 5 ஆம் பிரிவைத் திருத்து வதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, "நீதிமன்ற நிபுணர்", "உள்ளூரதிகார சபை", "மாகாண சபை", "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" மற்றும் "பகிரங்கப் பதவி" என்னும் சொல்லமைப்பு களுக்கான புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை நீக்கிவிட்டு "பதிவுசெய்யப் பட்ட அற்றோணியை நியமித்தல்" என்னும் புதிய 27 ஆம் பிரிவின்மூலம் அதனை மாற்றீடு செய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, 27 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அற்றோணி ஒருவரை நியமித்துள்ள ஒரு திறத்தவருக்கும் மற்றும் 393 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவொரு நியமத்தருக்கும் ஏதேனும் மன்றாணை, அறிவித்தல் அல்லது வேறேதேனும் ஆவணம் சேர்ப்பிக்கப்படுதல் தொடர்பாகப் புதிய (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், " முன்விளக்கத் தேதியை நிர்ணயித்தல் பற்றி" என்ற தலைப்பிடப்பட்ட புதிய அத்தியாயம் Xஅ என்பதை முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் X ஐ உடனடுத்து உட்புகுத்துவ தாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவை நீக்கிவிட்டு "விளக்கத் தேதியை நிர்ணயித்தல்" என்னும் புதிய பிரிவின்மூலம் அதனை மாற்றீடு செய்வதாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 80அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துவதுடன், இதன் சட்டப்பயனானது, முன்விளக்கநடபடிகள் அனுமதிக்கப்படாவிடின், பாரதூரமான, பரிகரிக்க முடியாத அநீதிவிளைவிக்கப்படுமென நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய, அத்தகைய நடபடிகளுக்கான விண்ணப்பமெதுவும் அனுமதிக்கப்படுதலாகாதென்பதாகும்.

**வாசகம் 8 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 5 ஆம் வாசகத்தினாலும் 10 ஆம் வாசகத்தினாலும் செய்யப்பட்டதிருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 9 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 5 ஆம் வாசகத்தினாலும் 10 ஆம் வாசகத்தினாலும் செய்யப்பட்டதிருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும். ஷ

**வாசகம் 10 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVII ஐ உடனடுத்து "முன்விளக்கம் பற்றி" என்ற தலைப்பிடப்பட்ட புதிய அத்தியாயம் XVIIஅ என்பதை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 11 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 146 ஆம், 147 ஆம் பிரிவுகளை நீக்குவதாகும்.

**வாசகம் 12 :** இவ்வாசகம், வழக்குகளை ஒன்று திரட்டுதல் தொடர்பாக முதன்மைச் சட்டவாக்கத்தில் 149அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 13 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 151அ என்னும் புதியபிரிவை உட்புகுத்து வதுடன், இதன் சட்டப்பயனானது, ஒரு சாட்சியின் பிரதான வாய்மொழிமூலமான விசாரணைக்காகச் சத்தியக் கடுதாசியொன்று பதிலிடப்படுவதற்கு நீதிமன்றம் கட்டளையிடலாமென்பதாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 393 முதல் 398 வரையிலானபிரிவுகளை (இரண்டு முட்பட) நீக்கிவிட்டு அவற்றை மாற்றீடு செய்வதாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 405 ஆம் பிரிவை நீக்குவதாகும்.

***வாசகம் 16 :*** *இவ்வாசகம், முறையே, "ஏதேனும் பகிரங்க அலுவலகம், கூட்டுத்தாபனம் முதலியவற்றினால் பேணப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைப் பெறுதல்." மற்றும் "ஆவணம் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தாலொழிய, ஆவணம் பற்றிய எண்பிப்பு அவசியமில்லை." என்பன பற்றி முதன்மைச் சட்டவாக்கத்தில் 440ஆ மற்றும் 440இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதாகும்.*

***வாசகம் 17 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 774 ஆம் பிரிவுக்கான (3) ஆம் உட்பிரிவை உட்புகுத்துவதாகும்.*

***வாசகம் 18 :*** *இப்பிரிவின் சட்டப்பயனானது, மாவட்டநீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டுள்ளவையும் ஆனால் அவை தொடர்பில் விளக்கத்துக்கான தேதியெதுவும் நிர்ணயிக்கப்படாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும் கருமங்களும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்தனவாகவிருப்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 19 :*** *இவ்வாசகம், புதிய "படிவம் 7அ" என்பதை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதாகும்.*

# குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

ச.வ.ஓ. 48 /2015

## (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

101 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "நீதிமன்றம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

' "நீதிமன்ற நிபுணர்" என்பது, ஏதேனும் விடயத்தில், துறையில் அல்லது கற்கைநெறிகளில் விசேடமாகத் தேர்ச்சிபெற்றவராகவுள்ள அல்லது அறிவுடையவராகவுள்ள ஆளொருவர் என்று பொருளாதல் வேண்டும்;';

(2) "சட்டமுறை ஆவணம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

' "உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும்

2-PL 005081 - 475 (2017/03)

சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்தனவாகவுள்ள அல்லது அவற்றையொத்தனவாகவுள்ள தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;';

(3) "தொடக்க நீதிமன்றம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

' "மாகாணசபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 154அ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டவொரு மாகாணசபை என்று பொருளாதல் வேண்டும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக் கொடை, கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளை அல்லது மூலதனத்தைக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

"பகிரங்கப் பதவி" என்பது, 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, தேசிய சுவடிக்கூடச் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.'.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பதிவு செய்யப்பட்ட அற்றோணியை நியமித்தல்.

27. (1) ஏதேனும் தோற்றத்தை அல்லது விண்ணப்பத்தைச் செய்வதற்கு அல்லது மேற்கூறப்பட்டவாறான ஏதேனும் செயலைச் செய்வதற்குப் பதிவுசெய்யப்பட்ட அற்றோணியொருவரின் நியமனப்பத்திரம்:-

(அ) பொருளளவில் இச்சட்டக்கோவைக்கான முதலாம் அட்டவணையின் படிவம் இல. 7 இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தில் கோப்பிடப்படுதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட அற்றோணி எந்தத் திறத்தவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அந்தத் திறத்தவருக்குப் பதிலாக, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் மன்றாணையின் சேர்ப்பிப்பு அத்தகைய பதிவுசெய்யப்பட்ட அற்றோணிக்குச் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஏதேனும் மன்றாணை, அறிவித்தல் அல்லது வேறேதேனும் இயைபான தகவல் என்பன ஒரு பதிவுசெய்யப்பட்ட

அற்றோணிக்குச் சேர்ப்பிக்கப்படக் கூடிய இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரி ஏதேனுமிருப்பின் அதனை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) (அ) பதிவுசெய்யப்பட்ட அற்றோணியை நியமிக்கின்ற திறத்தவரொருவர் இயற்கை ஆளாக வுள்ளவிடத்து, வழக்கு நடவடிக்கைகள் இறுதி யாகத் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் அத்த கைய திறத்தவர் இறக்கும் பட்சத்தில் சட்ட வழக்கு நடவடிக்கைகளின் நோக்கத்துக்காகச் சட்டப் பிரதிநிதியொருவரைப் பெயர்குறித்து நியமிக்கின்ற நிருபமொன்று சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட நிருபம், பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணை யின் படிவம் இல.7அ வில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

(இ) 393 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டப் பிரதிநிதிகளின் பெயர் நியமனமும் அத்த கைய நிருபத்தைக் கோப்பிடுதலும் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான நியமனப்பத்திரம் கோப்பிடப்படும்போது, ஒரு பதிவுசெய்யப்பட்ட அற்றோணியின் நியமனம்-

(அ) நீதிமன்றத்தின் அனுமதியுடனும் கட்சிக்காரரினால் கையொப்பமிடப் பட்டு நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட அற்றோணிக்கான எழுத்திலான அறிவித்தலின் பின்னரும் கட்சிக்காரரினால் எழுத்தில் இல்லா தொழிக்கப்படும் வரையும்;

(ஆ) (i) கட்சிக்காரரினால் கையொப்பமிடப் பட்டும் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட் டும் பதிவுசெய்யப்பட்ட அற்றோணியி னால் எழுத்தில் இல்லாதொழிக்கப்படும் வரையும்;

(ii) கட்சிக்காரருக்கு முப்பதுநாட்கால அறி வித்தல் கொடுத்தபின்னர் நீதிமன்றத் தின் அனுமதியுடன் பதிவுசெய்யப்பட்ட அற்றோணியினால் இல்லாதொழிக்கப் படும் வரையும்;

(இ) கட்சிக்காரர் இறக்கும் வரையும்;

(ஈ) பதிவுசெய்யப்பட்ட அற்றோணி இறக்கும் வரையும் அல்லது இயலாதவராகும் வரையும்; அல்லது

(உ) கட்சிக்காரரைப் பொறுத்தவரை வழக்கிலான எல்லா நடவடிக்கைகளும் முடிவடைந்து தீர்ப்பு அளிக்கப்படும் வரையும்,

வலுவிலிருத்தல் வேண்டும்.

(4) வழக்குரைஞரெவரும் ஏதேனும் தோற்றத் தைப் பதிவதற்கு அல்லது விண்ணபத்தைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் செயலைப் புரிவ தற்கு அவருக்குத் தத்துவமளிக்கின்ற ஏதேனும் ஆவணத்தை முன்வைப்பதற்குத் தேவைப்படுத் தப்படுதலாகாது. சட்டத்துறைத் தலைமையதிபதி, குறிப்பிட்ட ஏதேனும் வழக்கில் விசேடமான முறையில் செயலாற்றுவதற்கு அல்லது அரசின் சார்பில் பொதுவாகச் செயலாற்றுவதற்குப் பதிவு செய்யப்பட்ட அற்றோணியொருவரை நியமிக்க லாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளாக இலக்கமிடப்பட வேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(2) இருபத்தேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கொடுக்கப்பட்ட முகவரியில் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் கொடுக்கப்பட்ட இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் மன்றாணை, அறிவித்தல் அல்லது வேறேதேனும் ஆவணம், நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, பதிவுசெய்யப்பட்ட அற்றோணியை நியமித்துள்ளவரான திறத்தவருக்குப் போதிய ஒப்படைப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 27 (2) இன்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நிருபத்தில் கொடுக்கப்பட்ட முகவரியில் மன்றாணை, அறிவித்தல் அல்லது வேறேதேனும் ஆவணம் என்பவற்றின் சேர்ப்பிப்பு, 393 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நியமத்தருக்கான அல்லது நியமத்தர்களுக்கான போதிய ஒப்படைப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் Xஅ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் X ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயாம் Xஅ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் X அ

**முன்விளக்கத் தேதியை நிர்ணயித்தல் பற்றி**

*முன்விளக்க வழக்கு நடவடிக்கைகளுக்கான தேதி.*

79அ. (1) நீதிமன்றமானது -

(அ) மறுமொழியைக் கோப்பிடுவதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் முடிவுறுவதன்மீது உடனடியாக; அல்லது

(ஆ) எதிர்மறுமொழியொன்று அனுமதிக்கப்படுமிடத்து, அந்த எதிர்மறுமொழியைக் கோப்பிடுவதற்காக அனுமதிக்கப்பட்ட காலத்தின் கடைசி நாளன்று,

மற்றும் அது கோப்பிடப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி, ஒன்றில் வழக்குக்கான எல்லாத் திறத்தவர்களினதும் முன்னிலையில் அல்லது சமுகமளித்துள்ளவர்களான அத்தகைய திறத்தவர்களின் முன்னிலையில், முன்விளக்கக் கேட்புக்கான அத்தகைய தேதி தொடங்கப்படுவதற்கான அத்தகைய தேதியிலிருந்து மூன்றுவாரங்களுக்கு முந்தியதாகவிராததும் இரண்டு மாதங்களை விஞ்சாததாகவுள்ளதுமான தேதியொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) நீதிமன்றமானது தேதியொன்றை நியமிக்கு முன்னர், வருகைதராத திறத்தவர்களுக்கு வழக்கு நடவடிக்கைகள் பற்றி முறையாக அறிவிக்கப்பட்டுள்ளதெனத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"விளக்கத் தேதியை நிர்ணயித்தல்.*

80. விளக்க நீதிமன்றத்தில் வழக்கின் விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்கு வழக்கைக் கூப்பிடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நீதிமன்றம் வழக்கின் விளக்கத்துக்கான தேதியொன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன், 55 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகப் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றைக் கொடுத்துதவியுள்ளவர்களும் அத்தகைய அறிவித்தலைச் சேர்ப்பிப்பதற்கான ஆகுசெலவை அளித்துள்ளவர்களுமான எல்லாத் திறத்தவர்களுக்கும் பதிவஞ்சல்மூலம் எழுத்தில் அதுபற்றிய அறிவித்தலைக் கொடுத்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 80அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 80அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"விளக்கத் தேதியை நிர்ணயித்த பின்னர் முன்விளக்க நடபடி களுக்கான விண்ணப்பங்கள் எவையுமில்லை.*

80அ. (1) (அ) வழக்கை விளங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், முன்விளக்க நடபடிகளுக்கான விண்ணப்பமெதுவும், அத்தகைய நடபடிகளை அனுமதிக்காதுவிடின் பாரதூரமான மற்றும் பரிகரிக்க முடியாத அநீதி விளைவிக்கப்படுமெனப் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய, அனுமதிக்கப்படுதலாகாது.

(ஆ) அத்தகைய பட்சத்தில், அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவருக்கெதிராக நீதிமன்றம் தகுதியானதென அது கருதுகின்ற

வாறாகச் செலவுதொகைகள் பற்றிய அல்லது வேறுவகையான அத்தகைய நியதிகளை விதிக்கலாம்.

(2) வழக்கின் விளக்கம் எந்த வழக்கெழு வினாக்களின்மீது மேற்கொண்டு நடாத்தப்படவுள்ளதோ அந்த வழக்கெழு வினாக்கள் முன்விளக்க நீதிபதியினால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளவிடத்து, விசேடமான சூழ்நிலைகளிற்றவிரவும் மற்றும் அதற்கான திருத்தமெதனையும் அனுமதிப்பதற்கு மறுத்தல் அத்திருத்தத்துக்காக விண்ணப்பிக்கின்ற திறத்தவருக்கு வெளிப்படையான அநீதியை விளைவிக்குமென நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழியவும், விளக்கத்தில் அதற்கான திருத்தம் எதுவும் செய்யப்படுதலாகாது.

(3) ஒரே வழக்கில் சட்டம் மற்றும் நிகழ்வு ஆகிய இரண்டும் பற்றிய வழக்கெழு வினாக்கள் எழுகின்றவிடத்தும், சட்டம் பற்றிய வழக்கெழு வினாக்கள்மீது மட்டுமே வழக்கானது கேட்டுத் தீர்மானிக்கப்படலாமென நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்தும், அது அவ்வழக்கெழு வினாக்களை முதலில் விளங்குதல் வேண்டுமென்பதுடன், அந்நோக்கத்துக்காக, சட்டம் பற்றிய வழக்கெழுவினாக்கள் தீர்மானிக்கப்பட்ட பின்னர் வரை நிகழ்வுபற்றிய வழக்கெழு வினாக்களின் தீர்த்து வைத்தலைப் பின்போடலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்,"வழக்கு விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழக்கு முன்விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், “வழக்கு விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக “வழக்கு முன்விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், “கேட்புக்குமுன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “முன்விளக்கத்துக்குமுன்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் XVIIஅ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் XVII ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் XVIIஅ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“அத்தியாயம் XVII அ

**முன்விளக்கம் பற்றி**

ஒப்புதலும் வழக்கெழு வினாக்களும்.

142அ. திறத்தவர்கள், தமது உத்தேசிக்கப்பட்ட ஒப்புதல்களினதும் வழக்கெழு வினாக்களினதும் பிரதியொன்றை மற்றெல்லாத் திறத்தவர்களுக்கும் சமர்ப்பிப்பதன்மூலமான சேர்ப்பிப்புக்கான எண்பிப்புடன், முன்விளக்கக் கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பதினாக்கு நாட்களுக்கு முன்னர் அத்தகைய ஒப்புதல்களையும் வழக்கெழு வினாக்களையும் எழுத்தில் நீதிமன்றப் பதிவகத்துக்கு அளித்தல் வேண்டும்.

முன்விளக்கக் கேட்பை முற்போடுதல் அல்லது பிற்போடுதல்.

142ஆ. முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, ஒன்றில் தமது சொந்தப் பிரேரணையின் மீது அல்லது எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின் மீதும் காட்டப்பட்ட போதிய காரணத்துக்காகவும், முன்விளக்கக் கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியை முற்போடலாம் அல்லது பிற்போடலாம்:

ஆயின், முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, அத்தகைய கேட்பு தொடங்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள், முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதியினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அதற்கிணங்கச் செயலாற்றுவதிலிருந்து அவர் தடுக்கப்பட்டாலொழிய, கேட்பை முடிவுறுத்துதல் வேண்டுமென்பதுடன், விதிவிலக்கான சூழ்நிலைகளிற்றவிர, நான்கு வாரங்களை விஞ்சுகின்ற ஒத்திவைப்பெதுவும் வழங்கப்படுதலுமாகாது.

*திறத்தவர்கள் தோன்றத் தவறும்போது.*

142இ. (1) எவரேனும் திறத்தவர் -

(அ) அவரது அல்லது அவளது வழக்கை விழிப்புக்கவனத்துடன் தொடுப்பதற்குத் தவறினால்; அல்லது

(ஆ) முன்விளக்கத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட நாளன்று அல்லது அது எந்த நாளுக்கு ஒத்திவைக்கப்படுகின்றதோ அந்த வேறேதேனும் நாளன்று தோன்றுவதற்குத் தவறினால்,

முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, தோதான எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்துட் கொண்டு,-

(i) இச்சட்டக்கோவையின் அத்தியாயம் XII இல் குறித்துரைக்கப்பட்ட முறைகளுள் ஒன்றில் வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கலாம்; அல்லது

(ii) தகுதியானதென அவர் கருதக் கூடியவாறான அத்தகைய வேறு கட்டளையை ஆக்கலாம்.

(2) முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, அத்தியாயம் XII இல் குறித்துரைக்கப்பட்ட முறைகளுள் ஏதேனுமொன்றைக் கடைப்பிடித்து வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு மேற் கொண்டு நடவடிக்கையெடுக்கும் பட்சத்தில், அவ் வத்தியாயத்தின் ஏற்பாடுகள் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண் டும்.

முன்விளக்கம்.

142ஈ. முன்விளக்கக் கேட்பில், முன்விளக் கத்தை நடாத்துகின்ற நீதிபதி, பின்வரும் நோக்கு டன் திறத்தவர்களை வினவவும் அல்லது தத்தமது வழக்குகளைக் கூறும்படி அவர்களைக் கோரவும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நியாயாதிக்கஞ்சார் வழக்கெழு வினாக் களை நிச்சயித்தல்;

(ஆ) பிணக்கிலுள்ள கருமங்களைத் தெளிவாக்கு தல்;

(இ) நிகழ்வுகளினதும் ஆவணங்களினதும் ஒப்புதல்களைப் பெறுதல்;

(ஈ) முடிவுறாதுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குகளை ஒன்று திரட்டுதல்;

(உ) நிபுணர்களாகவுள்ள சாட்சிகளுட்பட ஏல்தகைமை மற்றும் இயைபானதன்மை என்பவற்றின் அடிப்படையில் சாட்சிகளின் எண்ணிக்கையை அடையாளங் காணுதல்;

(ஊ) நீதிமன்ற நிபுணரொருவரை நியமித்தல்;

(எ) அத்தகைய வழக்கில் பிரச்சினையிலுள்ள கருமம் தொடர்பாக, ஒரு சீராக்கம், இணக்கத்தீர்வு, இணக்கப்பாடு அல்லது வேறு உடன்பாடு என்பவற்றைச் செய்வதற்குத் திறத்தவர்களுக்கு உதவுதல்; அத்துடன் அந்நோக்கத்துக்காக, வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, அவரது கருத்தில் நியாயமானவையாகவுள்ள இணக்கத்தீர்வு நியதிகள் பற்றி ஆலோசனையளிக்கலாம்;

(ஏ) வழக்கைத் துரிதமாகக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு உதவியாகவிருக்கும் வேறெவையேனும் கருமங்களை நிச்சயித்தல் மற்றும் பதிதல்; அத்துடன்

(ஐ) வழக்கைத் துரிதமாகவும் குறைந்த செலவிலும் கேட்டுத் தீர்மானிப்பதற்கு அவசியமானவை அல்லது விரும்பத்தக்கவை என அவருக்குத் தோன்றக்கூடியவாறான எல்லா நடபடிகளையும் எடுத்தல் மற்றும் அத்தகைய எல்லாக் கட்டளைகளையும் ஆக்குதல்.

முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி கட்டளைகளை ஆக்கலாம்.

142உ. முன்விளக்கத்தில், முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, 142ஈ என்னும் பிரிவினால் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கலாமென்பதுடன்,-

(அ) ஏதேனும் நிகழ்வு தொடர்பிலான கேள்வி பற்றி விசேடமான மற்றும் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ள ஆளொருவரிடமிருந்து பெறப்பட்ட எழுத்திலான அறிக்கை மூலம் தீர்மானிக்கப்பட்ட அந்நிகழ்வு தொடர்பாகவும்;

(ஆ) ஏதேனும் நிகழ்வு அல்லது அபிப்பிராயம் தொடர்பிலான கேள்விபற்றி விசாரணை செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் தனிப் பட்ட நிபுணரொருவரை நியமிப்பதற்கான கட்டளையொன்றுட்படச் சட்டக்கோவை யின் அத்தியாயம் XXIX இன் கீழான ஆணையொன்றை வழங்குவதற்காகவும்; அத்துடன்

(இ) ஏதேனும் பகிரங்கப் பதவி, பகிரங்கக் கூட்டுத்தாபனம், மாகாணசபை அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் கட்டுக் காப்பிலுள்ள எவையேனும் ஆவணங்க ளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவதற்கான, கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

*முன்விளக்கக் கேட்பை நடாத்துகின்ற நீதிபதி பதிய வேண்டிய கருமங்கள்.*

142ஊ. (1) முன்விளக்கத்தில் முன்விளக் கத்தை நடாத்துகின்ற நீதிபதி, பின்வருவனவற் றைப் பதிதல் வேண்டும்:-

(அ) நிகழ்வுகள் அல்லது ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் உள்ளீடுகள் பற்றித் திறத்த வர்களினாலான ஒப்புதல்கள்;

(ஆ) ஏதேனும் கருமம் தொடர்பாகத் திறத்தவர் களின் உடன்படிக்கை;

(இ) பின்வருவனவற்றை ஏற்றுக் கொள்வதற் கும் அவற்றுக்கு அமைந்தொழுகுவதற்கும் திறத்தவர்களின் உடன்படிக்கை:-

(i) திறத்தவர்களுக்கிடையே உடன் பட்டுக் கொள்ளப்படக் கூடியவா றான அத்தகைய முறையில் செய்யப் பட்ட முன்விளக்கத்தை நடாத்து

கின்ற நீதிபதியின் ஏதேனும் முடிபு, மற்றும் அத்தகைய முடிபுக்கிணங் கத் தீர்ப்பைப் பதிதல்;

(ii) நிகழ்வு அல்லது சட்டம் பற்றிய எவையேனும் அல்லது எல்லா வழக்கெழுவினாக்கள் மீதும் முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதியின் ஏதேனும் முடிபு மற்றும் அத்தகைய முடிபுக்கிணங்கத் தீர்ப்பைப் பதிதல்;

(ஈ) பின்வருவன பற்றித் திறத்தவர்களின் ஏதேனும் உடன்படிக்கை:-

(i) ஏதேனும் நிகழ்வின் அல்லது ஆவணத்தின் எண்பிப்பு முறை தொடர்பாகவும்;

(ii) அழைக்கப்படவேண்டிய சாட்சிக ளின் எண்ணிக்கை பற்றியும்;

(iii) முடிவுறாதுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குகளை ஒன்று திரட்டுதலும்;

(உ) வழக்குகளை மீளப்பெறுதல்; அத்துடன்

(ஊ) வழக்குகளின் சீராக்கம், இணக்கத் தீர்வு அல்லது இணக்கப்பாடு.

(2) முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் திறத்தவர்களின் உடன்படிக்கையொன்றைப் பதியும் போது, அத்தகைய நீதிபதி, அத்தகைய

உடன்படிக்கையின் பயனையும் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு வாசித்துக்காட்டி விளக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உடன்படிக்கை யின் உள்ளீடுகளையும் அதன் நிகழ்வைப் பதித லும் வேண்டும். திறத்தவர்கள் உடன்படிக்கையைக் கையொப்பமிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி வழக்கெழு வினாக்களை முடிபு செய்தல்.

*142எ.* முன்விளக்கக் கேட்பில், 142அ என்னும் பிரிவின்கீழ் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேசிக் கப்பட்ட ஒப்புதல்களையும் வழக்கெழு வினாக் களையும், வழக்குரைகளையும், வினாக் கொத்து களையும், ஏதேனும் உடன்படிக்கையையும் கவனத் துட்கொண்டு வழக்கெழுவினாக்கள் தீர்மானிக் கப்படலாம்.

முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி வழக்கெழு வினாக்கள் எழுப்பப் படுதலை ஒத்தி வைக்கலாம்.

*142ஏ.* முன்விளக்க வழக்கு நடவடிக்கைகளில் சமுகமளித்திராத சில ஆட்களை விசாரணை செய்யாமல், அல்லது வழக்கில் காண்பிக்கப்படாத சில ஆவணங்களைச் சோதனைசெய்யாமல் வழக்கெழு வினாக்களைச் சரியானமுறையில் எழுப்பமுடியாதென முன்விளக்கத்தை நடாத்து கின்ற நீதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய நீதிபதி, நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட வேண்டிய எதிர்வரும் நாளொன்றுக்கு வழக்கெழு வினாக்கள் எழுப்பப்படுதலை ஒத்திவைக்கலா மென்பதுடன், அழைப்புக்கட்டளை அல்லது வேறு மன்றாணை மூலம், அத்தகைய ஆள் வருகை தருவதனை அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதனைக் கட்டாயப்படுத்தலாம்.

முன்விளக்க நடபடிகள் எடுக்கப் பட்டுள்ள போது, தேதி நியமிக்கப்படுதல் வேண்டும்.

*142ஐ.* வழக்கெழுவினாக்கள் தீர்த்துவைக்கப் பட்ட பின்னரும், மற்றும்–

(அ) முன்விளக்க நடபடிகள் எல்லாம் எடுக் கப்பட்டுள்ளனவெனத் திறத்தவர்கள்

முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதிக்கு அறிவித்ததன்மேலும்; அத்துடன்

(ஆ) 142ஈ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய எல்லா முன்விளக்க நடபடிகளும் திறத்தவர்களினால் எடுக்கப்பட்டுள்ளனவென முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி திருப்திப்படுமிடத்தும்,

முன்விளக்கத்தை நடாத்துகின்ற நீதிபதி, விளக்க நீதிமன்றத்தில் வழக்கின் விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்கென வழக்கைக் கூப்பிடுவதற்காக அத்தகைய தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள்ளான தேதியொன்றை உடனடியாக நியமித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 146, 147 மற்றும் 148 ஆம் பிரிவுகளை நீக்குதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 146, 147 மற்றும் 148 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 149அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 149 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 149அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"வழக்குகளை ஒன்று திரட்டுதல்.*

149அ. (1) எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குகளில் பிரச்சினையிலுள்ள சட்டம் அல்லது நிகழ்வுபற்றிய கேள்விகள் பொருளளவில் ஒத்தவையாகவிருக்கின்றனவோ அந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குகளை நீதிமன்றம் தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் திறத்தவர்களின் உடன்படிக்கையின்மீதும் ஒன்றுதிரட்டும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(2) நீதிமன்றம், திறத்தவர்களின் சம்மதத்துடன்-

(அ) பல்வேறு வழக்குகள் ஒரே நேரத்திலும் ஒரே சான்றின்மீதும் விளங்கப்படவேண்டுமெனவும்; அல்லது

(ஆ) ஒரு வழக்கிலான சான்று இன்னொன்றில் சான்றாகப் பயன்படுத்தப்படவேண்டுமெனவும்; அல்லது

(இ) பல்வேறு வழக்குகளில் ஒன்று விளங்கப்படவேண்டுமெனவும் ஏனைய வழக்குகள், பெறுபேறினால் அமைந்தொழுகப்படுவதற்காக நிறுத்திவைக்கப்படவேண்டுமெனவும்,

கட்டளையிடலாம்:

ஆயின், எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மேல், நீதிமன்றம், தெரிவு செய்யப்பட்ட வழக்கு, உட்படுத்தப்பட்ட வழக்கெழு வினாக்களின் உண்மையான விளக்கமாக விருப்பதற்குத் தவறுமிடத்து, அவ்வாறு நிறுத்திவைக்கப்பட்ட வழக்குகளுள் இன்னொன்றை விளங்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 151அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 151அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"சத்தியக் கடுதாசி பதிலிடப் படலாம்.

151அ. (1) நீதிமன்றம், 151 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அதன் சொந்தப் பிரேரணையின் மீது அல்லது வழக்குக்கான திறத்தவர்களுள் ஒருவரின் வேண்டுகோளின் பேரில், சத்தியக்கடுதாசியொன்று ஒரு சாட்சியின்

பிரதான வாய்மொழிமூலமான விசாரணைக்காகப் பதிலிடப்படலாமெனக் கட்டளையிடலாமென்பதுடன், அத்தகைய சாட்சியை அழைக்கின்ற திறத்தவரை, நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்டவொரு தேதியன்று அத்தகைய சத்தியக்கடுதாசியை அளிக்கும்படியும் பணிக்கலாம்; அத்தேதி, எதிர்திறத்தவர் விளக்கத்துக்காக ஆயத்தஞ் செய்வதனை இயலச்செய்வதற்கு விளக்கத் தேதிக்குக் குறைந்தபட்சம் பத்துநாட்களுக்கு முன்னதாகவேனும் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, சத்தியக் கடுதாசியை அளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள திறத்தவர், அதனை, அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து, சத்தியக்கடுதாசியின் பிரதியொன்று சேர்ப்பிக்கப்பட்டமைக்கான எண்பிப்புடன் எதிர்த்திறத்தவரின் எல்லா ஆவணங்களினதும் பிரதிகளுடன் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அளித்தல் வேண்டும்.

(3) விளக்கத் தேதியன்று, சத்தியக் கடுதாசியை அளிக்கின்ற திறத்தவர், அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆவணங்களும் உட்பட, அதனை உறுதிப்படுத்தியுள்ள அல்லது சத்தியஞ் செய்துள்ள சாட்சிமூலம் சத்தியக் கடுதாசியைக் காண்பித்தல் வேண்டும். ஒன்றில் அத்தகைய சான்றின் அல்லது சான்றின் பாகத்தின் ஏல்தகைமையின்மையின்மீது அல்லது அத்தகைய சத்தியக்கடுதாசியுடன் இணைக்கப்பட்ட எவையேனும் ஆவணங்களின் ஏல்தகைமையின் மீது அல்லது மெய்யானதன்மையின்மீது, அது பெறப்படுவதற்கெதிராக ஆட்சேபனை தெரிவிப்பதற்கு எதிர்த்திறத்தவர் உரித்துடையராகவுள்ளார். அத்தகைய பட்சத்தில், எதிர்த்திறத்தவரினால்

சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுவதற்கு முன்னர் நீதிமன்றம் அத்தகைய ஆட்சேபனைமீது தீர்வறிக்கையொன்றைச் செய்யலாம்:

ஆயின், நீதிமன்றம், தோதான சூழ்நிலைகளில், சத்தியக்கடுதாசியில் அடங்கியுள்ள சான்றுடன் சேர்த்து மேலதிகமாக, வாய்மொழி மூலமான சான்றுகள் நெறிப்படுத்தப்படுவதனை அனுமதிக்கலாம்.

(4) கேள்வி நிலையானவையாகவுள்ள கருமங்கள் அல்லது அவதூறானதாகவுள்ள ஏதேனும் கருமம் பற்றிய சான்றைச் சத்தியக்கடுதாசி கொண்டிருந்தால், நீதிமன்றம் அத்தகைய கருமங்களை நீக்கிவிடும்படி கட்டளையிடலாமென்பதுடன், சத்தியக்கடுதாசியிலுள்ள கருமங்களுள் ஏனையவற்றை மேற்கொண்டு நடாத்தலாம் அல்லது அத்தகைய சத்தியக்கடுதாசியைக் கோப்பிட்ட திறத்தவரை ஏல்தகவுடைய புதிய கடுதாசியொன்றை அளிக்கும்படி கட்டளையிடலாம்; அத்துடன் ஏல்தகவற்ற சத்தியக்கடுதாசியைக் கோப்பிடுகின்ற திறத்தவர் செலவுதொகைகளைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 393 முதல் 398 வரையிலான பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 393 முதல் 398 வரையிலான பிரிவுகள் (இரண்டுமுட்பட) இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவுகள் இடப்படுகின்றன:-

"நிரூபம்.

393. (1) (இதனகத்துப்பின்னர் "பெயர் நியமிக்கும் திறத்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 27(2) ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அற்றோணியை நியமிக்கின்ற திறத்தவரொருவர், வழக்கு இறுதியாகத் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் அவர் இறக்கும் பட்சத்தில், வழக்கின் நோக்கங்களுக்காக அவரது சட்டப்பிரதிநிதியாக

விருப்பதற்கு, முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி, குறைந்தபட்சம் ஆளொருவரையும் மூன்று ஆட்களுக்கு மேற்படாதோரையும் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்:

ஆயின், நீதிமன்றம், வழக்கொன்று இறுதியாகத் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் நிருபம் கோப்பிடப்படாத பட்சத்தில், அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத் தின்மீது, அத்தகைய நிருபத்தை நீதிமன்றத்தினால் அத்தகைய நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட ஒரு தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கோப்பிடும் படி வழக்குக்கான திறத்தவரொருவரை அல்லது இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் நிருப மொன்றைக் கோப்பிடுவதற்கு தகவுடைய எவரே னுமாளைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய நிருபத்தைக் கோப்பிடுவதற்குத் தவறும் பட்சத்தில் நீதிமன்றம் தவறுகைபுரிகின்ற திறத்தவருக்குத் தோதான தண்டமொன்றை விதிக்கலாம்.

(2) (அ) வழக்கு இறுதியாகத் தீர்மானிக்கப் படுவதற்குமுன்னர் பெயர்நியமிப்பவர் இறக்கும் பட்சத்தில், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர் நியமிக்கப்பட்ட ஆள், அவரின் பெயர் எந்த முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி நிருபத்தில் தரப்பட்டுள்ளதோ அந்த முந்துரிமை ஒழுங்கு வரிசைப்படி வழக்கின் நோக்கங்களுக்காகத் திறத்தவரின் சட்டப் பிரதிநிதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) எந்தச் சட்டப் பிரதிநிதியின் பெயரானது நிருபத்தில் தரப்பட்டுள்ளதோ அந்தச் சட்டப் பிரதிநிதி இறக்கும் அல்லது இயலாமைக்குட்படும் பட்சத்தில், முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி

அடுத்ததாகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள், வழக்கின் நோக்கங்களுக்காகச் சட்டப் பிரதிநிதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) சட்டப் பிரதிநிதியாகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள், அவ்வாறு நியமிக்கப்படுவதற்குச் சம்மதம் தெரிவித்து நிருபத்தில் அவரது அல்லது அவளது கையொப்பத்தை இடுதல் வேண்டும். பெயர் நியமிக்கும் திறத்தவரினது கையொப்பமும் நியமிக்கப்படுவதற்குச் சம்மதிக்கின்ற நியமத்தரின் அல்லது நியமத்தர்களின் கையொப்பங்களும் ஒரு சட்டத்தரணியினால், சமாதான நீதவானினால் அல்லது சத்திய ஆணையாளரினால் சாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) நியமத்தரொருவர், எந்நேரத்திலும், பெயர் நியமிக்கும் திறத்தவருக்கான அறிவித்தலுடன், அத்தகைய நியமத்தராகவிருப்பதற்கான தமது சம்மதத்தை மீளப்பெறுவதற்குப் பிரேரணை என்ற வகையாக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அத்தகைய பட்சத்தில் நீதிமன்றம், பெயர் நியமிக்கும் திறத்தவரின் நியமத்தராக அவர் இல்லாதொழிகின்றாரெனக் கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய நியமத்தரின் பெயர் அகற்றப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பெயர் நியமிக்கும் திறத்தவரொருவர், வழக்கு இறுதியாகத் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நியமத்தர்களைப் பெயர்குறித்து நியமிக்கின்ற புதிய நிருபமொன்றை அளிக்கும்படி நியமத்தர்களுக்கான அறிவித்தலுடன் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய புதிய நிருபம்

கோப்பிடப்படுவதன்மேல், அத்தகைய பெயர்நியமிக்கும் திறத்தவரின் முன்னைய நிருபம் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய நிருபத்தில் அடங்கியுள்ள பெயர் நியமனம் உடனடியாகப் பயனுறுதலும் வேண்டும்.

(5) இறந்துள்ள பெயர்நியமிப்பவரின் சட்டப் பிரதிநிதி, இறந்துள்ள பெயர்நியமிக்கும் திறத்தவர் இறந்தபின்னர் வழக்கெழு காரணம் தொடர்ந்திருந்தால், இறந்துள்ள பெயர் நியமிக்கும் திறத்தவர் உயிரோடிருந்திருப்பின் அவர் எந்த நடபடிகளை எடுப்பதற்கு உரித்துடையவராகவிருந்திருப்பாரோ அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) (அ) இறந்துள்ள பெயர் நியமிக்கும் திறத்தவரின் சட்டப்பிரதிநிதியாகச் செயலாற்றுவதற்கு நியமத்தரொருவர் மறுத்தலாகாது. அவர் முதலில் கேட்டுப் பெறப்பட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன், மனு என்றவகையாகவும் வேறு நியமத்தர்கள் எவரேனுமிருப்பின் அவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தபின்னரும், அத்தகைய பெயர்நியமிக்கும் திறத்தவரின் சட்டப்பிரதிநிதி என்ற பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு நீதிமன்றத்திடமிருந்து அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம், பெயர்நியமிக்கும் திறத்தவர் இறக்கும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குப் பிந்தாமல் செய்யப்படலாம்.

(ஆ) சட்டப்பிரதிநிதி என்ற பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்குமிடத்து, பெயர்நியமிக்கும் திறத்தவரினால் கோப்பிடப்பட்ட நிருபத்தில் முந்துரிமை ஒழுங்கு

வரிசைப்படி அடுத்தவராகவுள்ள நியமத்தர், வழக்கின் நோக்கங்களுக்காக, அத்தகைய இறந்துள்ள பெயர்நியமிக்கும் திறத்தவரின் சட்டப்பிரதிநிதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இறந்துள்ள பெயர்நியமிக்கும் திறத்தவரின் தனி நியமத்தராக அல்லது எஞ்சியுள்ள தனி நியமத்தராக உள்ள நியமத்தரொருவரினால் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான ஒரு விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, அத்தகைய நியமத்தர், அத்தகைய இறந்துள்ள பெயர் நியமிக்கும் திறத்தவரின் மரபுரிமையாளர்களுக்குத் தமது விண்ணப்பம் தொடர்பாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம் மேற்கூறப்பட்டவாறாக அனுமதியளிக்கும் பட்சத்தில், நீதிமன்றம், வழக்கின் நோக்கங்களுக்காக அத்தகைய இறந்துள்ள பெயர் நியமிக்கும் திறத்தவரின் சட்டப் பிரதிநிதியாகச் செயலாற்றுவதற்கு அத்தகைய இறந்துள்ள பெயர் நியமிக்கும் திறத்தவரின் மரபுரிமையாளரொருவரை நியமித்தலும் வேண்டும்.

நிருபமொன்றைக் கோப்பிடத் தவறுதல்.

394. (1) பெயர்நியமிக்கும் திறத்தவரொருவர் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிருபமொன்றைக் கோப்பிடுவதற்குத் தவறியுள்ளமை மற்றும் இறந்துள்ள திறத்தவரின் பிரதிநிதியொருவராக ஆளெவரும் நியமிக்கப்படாதிருக்கின்றமை எவ்வாறிருப்பினும், வழக்கில் பதியப்பட்ட ஏதேனும் தீர்ப்பு அல்லது தீர்வை அல்லது வழக்கில் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, செல்லுபடியானதாகவும் பயனுறுவதாகவும் இச்சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்கவுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இறந்துள்ள திறத்தவரின் சட்ட மரபுரிமையாளர்களையும் பிரதிநிதிகளையும் பிணிப்பதாதலும்

வேண்டும். ஒரு நிருபத்தைக் கோப்பிடுவதற்குத் தவறியமை, அத்தகைய வழக்கிலான நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்குவதற்கான ஏதுவாகவிருத்தலாகாது.

(2) (அ) ஒரு நிருபத்தைக் கோப்பிடுவதற்குத் தவறியிருந்த வழக்குக்கான திறத்தவரொருவர் இறப்பதன்மீது, வழக்குக்கான எவரேனும் திறத்தவர், நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ஒருவர் அல்லது மரணச்சொத்து நிருவாகத்துக்குட்படத்தக்க பெறுமதிக்குக் குறைவாகவுள்ள மரணச்சொத்தொன்றின் விடயத்தில், இறந்துள்ள திறத்தவரின் மரபுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள கிட்டிய உறவினர், அத்தகைய இறந்துள்ள திறத்தவரின் இடத்தில் பதிலிடப்பட வேண்டுமென வேண்டுகோள்விடுத்து, சத்தியக்கடுதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்பட்ட மனுவொன்று என்ற வகையாக மறுதிறத்தவரில்லா வழக்கிலான விண்ணப்பத்தின்மூலம் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) நீதிமன்றம், அத்தகைய நியமனம் அவசியமானதாகவுள்ளதென்றும் அத்தகைய திறத்தவர் இறப்பதன்மீது வழக்குக்கான காரணம் தொடர்ந்திருக்கின்றதென்றும் திருப்திப்படுவதன் மேல், அத்தகைய ஆளை நியமித்தல் வேண்டும்.

(இ) அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவரது நியமனத்துக்கு முன்னரான வழக்கு நடவடிக்கைகளினால் பிணிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், வழக்கில் நியமிக்கப்பட்டு பதிலிடப்பட்ட திறத்தவராக்கப்பட்ட ஆள், தாம் நிறைவேற்றுநரோ அல்லது நிருவாகியோ அல்லரென்று அல்லது மரணச்சொத்து நிருவாகத்துக்குட்படத்தக்க

பெறுமதிக்குக் குறைவாகவுள்ள மரணச் சொத் தொன்றின் விடயத்தில் இறந்துள்ள திறத்தவரின் மரபுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள கிட்டிய உறவினர் அல்லரென்று ஆட்சேபனை தெரிவிக்க லாம் அல்லது அத்தகைய பிரதிநிதி என்ற அவரது தன்மைக்குத் தோதான ஏதேனும் எதிர்வாதத்தைச் செய்யலாம்.

*சட்டப் பிரதிநிதியை அகற்றுவதற் கான விண்ணப்பம்.*

395. (1) (அ) நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ஒருவர் அல்லது மரணச்சொத்து நிருவாகத் துக்குட்படத்தக்க பெறுமதிக்குக் குறைவாகவுள்ள மரணச்சொத்தொன்றின் விடயத்தில், இறந்துள்ள திறத்தவரின் மரபுரிமையைப் பெற்றுக் கொண் டுள்ள கிட்டிய உறவினர், அத்தகைய இறந்துள்ள பெயர் நியமிப்பவரின் சட்டப்பிரதிநிதியை அகற்றுவதற்காகவும் அத்தகைய சட்டப்பிரதி நிதியாக, அத்தகைய விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளொருவரை அல்லது இறந்துள்ள பெயர் நியமிப்பவரினால் கோப்பிடப் பட்ட நிருபத்தில் முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி பெயர்குறிப்பிடப்பட்ட அடுத்த ஆளை நியமிப்பதற் காகவும் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். இறந்துள்ள பெயர் நியமிப்பவரின் அப்போதைக் கான சட்டப் பிரதிநிதியாகவுள்ள ஆள் அத்தகைய விண்ணப்பத்துக்கான எதிர்வாதியாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றமானது, ஒரு நிறைவேற்றுநரின் அல்லது நிருவாகியின் அல்லது மரணச்சொத்து நிருவாகத்துக்குட்படத்தக்க பெறுமதிக்குக் குறை வாகவுள்ளவொரு மரணச்சொத்தின் விடயத்தில், இறந்துள்ள திறத்தவரின் மரபுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள கிட்டிய உறவினரின் நலன்களுக் காகவுள்ளதெனத் திருப்திப்படுவதன்மீது, அத்த

கைய சட்டப் பிரதிநிதியை அகற்றி, இறந்துள்ள பெயர்நியமிக்கும் திறத்தவரினால் கோப்பிடப்பட்ட நிருபத்தில் முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி பெயர்குறிப்பிடப்பட்ட ஆளை இறந்துள்ள பெயர் நியமிக்கும் திறத்தவரின் சட்டப் பிரதிநிதியாக நியமிக்கலாம் அல்லது அவ்வாறு செய்வதற்குப் போதிய ஏதுக்கள் இருப்பின், விண்ணப்பத்தில் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளை நியமிக்கலாம்.

(இ) இவ்வுட்பிரிவின் கீழான விண்ணப்ப மொன்று, மனு மற்றும் சத்தியக்கடுதாசி என்ற வகையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம், இறந்துள்ள பெயர்நியமிப்பவரின் வேறு மரபுரிமையாளர்கள் எவரேனுமிருப்பின் அவர்களுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவித்தலையும் வழங்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் நிருபமொன்றைக் கோப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவொரு பெயர் நியமிக்கும் திறத்தவர் இறப்பதன் காரணமாக வழக்குநடவடிக்கைகள் எவையும் பிற்போடப்படுதல் அல்லது ஒத்திவைக்கப்படுதல் ஆகாது அல்லது வழக்கிலான ஏதேனும் நடபடி பிற்போடப்படுதலாகாது.

இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக-

"மரணச்சொத்து" என்பது, இறந்தவரின் மரணச் சொத்தினது முழுமொத்தப் பெறுமதி என்று பொருளாகும்; அத்துடன்

"சட்டப் பிரதிநிதி" என்பது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட நிருபமொன்றில் செய்யப்பட்ட பெயர்நியமனத்தின் நோக்கங்களுக்காக, இறந்துள்ள திறத்தவரின் அல்லது

ஆளின் மரணச்சொத்தைப் பிரதி நிதித்துவப் படுத்துகின்ற ஆளொருவர் என்று பொருளா கும்.

வழக்கு மேற்கொண்டு நடாத்தப்பட வேண்டுமென நீதிமன்றம் கட்டளை யாக்குதல்.

*396*. ஒன்றுக்கு மேற்பட்ட வழக்காளி அல்லது எதிராளி இருந்து அவர்களுள் எவரும் இறந்தால், மற்றும் வழக்குக்கான காரணத்தின்மீது வழக்குத் தொடுப்பதற்கான உரிமை, உயிரோடிருக்கும் வழக்காளிக்குத் தனியாகத் தொடர்ந்திருந்தால், அல்லது உயிரோடிருக்கும் எதிராளிக்கெதிராகத் தனியாகத் தொடர்ந்திருந்தால், நீதிமன்றம், சத்தியக்கடுதாசியினால் ஆதாரப்படுத்தப்பட்ட மனுமூலமான மறுதிறத்தவரில்லா வழக்கு விண்ணப்பத்தின்மீது, விடயத்துக்கேற்ப, உயிரோடிருக்கும் வழக்காளியின் அல்லது வழக்காளிகளின் தூண்டுதலின்பேரில், அல்லது உயிரோடிருக்கும் எதிராளிக்கு அல்லது எதிராளிக் கெதிராக வழக்கு மேற்கொண்டு நடாத்தப்படுதல் வேண்டுமென்ற பொருள்பட கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

சட்டப் பிரதிநிதி பதிலீடு செய்யப்பட்ட வழக்காளியாக் கப்படுதல்.

*397*. ஒன்றுக்கு மேற்பட்ட வழக்காளிகள் இருந்து அவர்களுள் எவரும் இறந்தால் மற்றும் வழக்குத் தொடுப்பதற்கான உரிமை, உயிரோடிருக்கும் வழக்காளிக்கு அல்லது வழக்காளிகளுக்குத் தனியாகத் தொடர்ந்திராமல் கூட்டாக இறந்துள்ள வழக்காளியின் சட்ட மரபுரிமையாளர்களுக்குத் தொடர்ந்திருந்தால், நீதிமன்றம், இறந்துள்ள வழக்காளியின் சட்டப் பிரதிநிதி, இறந்துள்ள வழக்காளியின் இடத்தில் பதிலீடுசெய்யப்பட்ட வழக்காளியாக்கப்படுவதனைச் செய்விக்கலாம். அத்துடன் நீதிமன்றம், அதன்மேல், பதிவேட்டில் அப்பொருள்பட்ட பதிவொன்று செய்யப்படு வதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், வழக்கை மேற்கொண்டு நடாத்துதலும் வேண்டும்.

சட்டப்பிரதிநிதி பெயர் பதியப் படுவதனைச் செய்விப்பதற்கு விண்ணப்பிக் கலாம்.

398அ. தனி வழக்காளி அல்லது உயிரோடிருக்கும் தனி வழக்காளி இறக்கும் விடயத்தில், இறந்தவரின் சட்டப் பிரதிநிதி, வழக்குத்தொடுப்பதற்கான உரிமை தொடர்ந்திருக்குமிடத்து, இறந்துள்ள வழக்காளியின் இடத்தில் பதிவேட்டில் தமது பெயர் பதியப்படுவதனைச் செய்விப்பதற்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்; அத்துடன் நீதிமன்றம், அதன்மேல், பதிவேட்டில் அப்பொருள்பட்ட பதிவொன்று செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், வழக்கை மேற்கொண்டு நடாத்துதலும் வேண்டும்.

இறந்துள்ள வழக்காளியின் சட்டப் பிரதிதியினால் விண்ணப்பமெதுவும் செய்யப்படாதவிடத்து.

398ஆ. இறந்துள்ள வழக்காளியொருவரின் எவரேனும் சட்டப் பிரதிநிதியினால், அத்தகைய வழக்காளி இறந்ததிலிருந்து ஆறு மாதங்களினுள் விண்ணப்பமெதுவும் நீதிமன்றத்துக்குச் செய்யப்படாவிடின், வழக்கு தணிந்துபோதல் வேண்டுமென்ற கட்டளையை நீதிமன்றம் ஆக்கலாம் என்பதுடன், வழக்கை எதிர்வாதிடுவதில் எதிராளியினால் உறப்பட்டிருக்கக்கூடியவாறானவையும் இறந்துள்ள வழக்காளியின் மரணச்சொத்திலிருந்து அறவிடப்படவேண்டியவையுமான செலவுதொகைகளையும் எதிராளிக்கு அளிக்கலாம். எவ்வாறாயினும், நீதிமன்றம், அது தோதானதெனக் கருதினால், வழக்காளி இறந்தபின்னர் எந்நேரத்திலும் செய்யப்பட்ட எதிராளியின் விண்ணப்பத்தின் மேலும் செலவுதொகைகள் பற்றிய அத்தகைய நியதிகளின்மேலும் அல்லது தகுதியானவையென அது கருதுகின்றவாறாக வேறுவகையிலும், பிணக்கிலுள்ள கருமத்தை இறுதியாகத் தீர்மானிப்பதற்கென வழக்கை மேற்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக, இறந்துள்ள வழக்காளியின் இடத்தில், இறந்துள்ள வழக்காளியின் சட்டப்பிரதிநிதியை நியமிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

இறந்துள்ள தனி வழக்காளியின் சட்டப்பிரதிநிதி, வழக்காளியாக்கப் படுவதற்கு விண்ணப் பித்தல்.

398இ. (1) ஒன்றுக்கு மேற்பட்ட எதிராளிகள் இருந்தால் மற்றும் அவர்களுள் எவரேனுமொருவர் தீர்வை பதியப்படுமுன்னர் இறந்தால், மற்றும் வழக்குக்கான காரணத்தின்மீது வழக்குத்தொடுப்பதற்கான உரிமை, இறந்துள்ள எதிராளியின் சட்டப்பிரதிநிதி பதிலீடு செய்யப்படாமல், உயிரோடிருக்கும் தனியான எதிராளிக்கு அல்லது எதிராளிகளுக்கு எதிராகத் தொடர்ந்திராதிருந்தால் மற்றும் தனி எதிராளி அல்லது உயிரோடிருக்கும் தனி எதிராளி இறக்கும் விடயத்தில், வழக்குத் தொடுப்பதற்கான உரிமை வழக்காளிக்குத் தொடர்ந்திருக்குமிடத்து, வழக்கைத் தொடர்ந்து நடாத்தும் நோக்கத்துக்காக இறந்துள்ள எதிராளியின் இடத்தில் அத்தகைய இறந்துள்ள எதிராளியின் சட்டப்பிரதிநிதியை நியமிக்கும்படி வழக்காளி, நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். நீதிமன்றம், அதன்மேல், இறந்துள்ள எதிராளியின் இடத்தில் அத்தகைய சட்டப் பிரதிநிதியின் பெயரைப் பதிவேட்டில் பதிதல் வேண்டுமென்பதுடன், வழக்கை எதிர்வாதிடுவதற்கு, அறிவித்தலொன்றில் குறிப்பிடப்படவேண்டியவொரு நாளன்று தோன்றும்படி அத்தகைய சட்டப் பிரதிநிதிக்கு அவ்வறிவித்தலை வழங்குதலும் வேண்டும்.

(2) நிருபத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இறந்துள்ள ஓர் எதிராளியின் சட்டப் பிரதிநிதி, இறந்துள்ள எதிராளியின் இடத்தில் எதிராளியாக விருப்பதற்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன், இப்பிரிவின் ஏற்பாடுகள், அவை ஏற்புடையற்பாலனவாகும் அளவுக்கு, அத்தகைய விண்ணப்பம் தொடர்பிலும் அதன்மீது எழுகின்ற வழக்கு நடவடிக்கைகளுக்கும் விளைவுகளுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 405 ஆம் பிரிவை நீக்குதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 405 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 440ஆ மற்றும் 440இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 440அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுவதுடன், அவை இச்சட்டவாக்கத்தின் 440ஆ மற்றும் 440இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“ஏதேனும் பகிரங்க அலுவலகம், கூட்டுத்தாபனம் முதலியவற்றி னால் பேணப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைப் பெறுதல்.

440ஆ. (1) குடியியல் நீதிமன்றமொன்றிலான எவையேனும் வழக்குநடவடிக்கைகளுக்கான திறத்தவரொருவர் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக, ஏதேனும் பகிரங்க அலுவலகத்தில் சாதாரணத் தொழில் நெறியில் ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில், நியதிச்சட்ட முறையான குழுவில், மாகாண சபையில் அல்லது உள்ளூரதிகாரசபையில் சாதாரணத் தொழில் நெறியின்போது பேணப்பட்ட ஒன்றில் வைப்பிலிடப்பட்ட அல்லது பேணப்பட்ட அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் அல்லது ஏதேனும் இடாப்பின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை, (அல்லது ஏதேனும் இடாப்பின் அல்லது புத்தகத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியைத்) தேவைப் படுத்துமிடத்து, விடயத்துக்கேற்ப, முன்விளக்கக் கேட்பை நடாத்துகின்ற நீதிபதி அல்லது நீதிமன்றம், வழக்குநடவடிக்கைகளில் அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதியின் இயைபான தன்மையை உறுதிப்படுத்துகின்றதும் சத்தியக் கடுதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்பட்டதுமான பிரேரணையொன்றின்மூலம் திறத்தவரொருவரினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல், விடயத்துக்கேற்ப, அத்தகைய அலுவலகத்துக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, சட்டத்

தினால் அல்லது நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட குழுவுக்கு, மாகாணசபைக்கு அல்லது ஓர் உள்ளூரதிகார சபைக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரை, அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை வழங்கும்படி பணிக்கலாம். முன்விளக்கக் கேட்பை நடாத்துகின்ற நீதிபதியின் அல்லது நீதிமன்றத்தின் கட்டளையைக் காண்பிப்பதன் மேலும் இயைபான கட்டணங்களைச் செலுத்துவதன் மேலும், அத்தகைய திறத்தவர் சம்பந்தப்பட்ட ஆவணத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஒரு திறத்தவரினாலான வழக்கு நடவடிக்கைக்கு இயைபானதாகச் சம்பந்தப்பட்ட ஏதேனும் பகிரங்க அலுவலகத்திடமிருந்து, பகிரங்கக் கூட்டுத்தாபனத்திடமிருந்து, சட்டத்தினால் அல்லது நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட குழுவிடமிருந்து, மாகாண சபையிடமிருந்து அல்லது உள்ளூரதிகாரசபையிடமிருந்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய திறத்தவரினால் பெறப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று, பகிரங்க அலுவலகம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், சட்டத்தினால் அல்லது நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட குழு, மாகாணசபை அல்லது உள்ளூரதிகாரசபை என்பவற்றிலிருந்தான அலுவலரொருவர் சாட்சியாக அழைக்கப்படாமல், அத்தகைய ஆவணம் சம்பந்தப்பட்ட அத்தகைய பகிரங்க அலுவலகம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், சட்டத்தினால் அல்லது நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட குழு, மாகாணசபை அல்லது உள்ளூரதிகாரசபை என்பவற்றில் தயாரிக்கப்பட்டது அல்லது அவற்றின் கட்டுக்காப்பில் உள்ளது என்ற நிகழ்வுக்கான எண்பிப்பாக அத்தகைய வழக்கு நடவடிக்கையில் காண்பிக்கப்

படலாமென்பதுடன், அதன்கண்ணுள்ள உள்ளீடுகளின் முதற்றோற்ற எண்பிப்பாகவும் இருக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், நீதிமன்றம் அதன் சொந்தப் பிரேரணையின்பேரில் அல்லது அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கான எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் ஆவணத்தின் மூலப்பிரதி காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம் மற்றும் அதனைப் பரிசோதனை செய்வதற்கு அத்தகைய எவரேனும் திறத்தவருக்கு அனுமதியளிக்கலாம் அல்லது அத்தகைய ஆவணத்தை வைத்திருப்பதற்கு அல்லது பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் சாட்சியாக அழைக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம்.

ஆவணம் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தாலொழிய, ஆவணம் பற்றிய எண்பிப்பு அவசியமில்லை.

440இ. (1) இச்சட்டக்கோவையில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு பகிரங்க அலுவலகம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், சட்டத்தினால் அல்லது நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட குழு, மாகாணசபை அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபை என்பவற்றினால் வழங்கப்பட்ட ஆவணத்தின் மூலப்பிரதியாக அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியாக தோற்றவளவில் உள்ள ஏதேனும் ஆவணத்தின் அதிகாரம் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக எதிர்த்திறத்தவரினால் கேள்விக்குட்படுத்தப்பட்டாலொழிய மற்றும் அத்தகைய காரணங்களுக்காக நீதிமன்றம் அவைபற்றிய எண்பிப்பைத் தேவைப்படுத்தினாலொழிய, அத்தகைய ஆவணம் பற்றிய எண்பிப்பையளித்தல் அவசியமாதலாகாது.

(2) ஏதேனும் ஆவணத்தின் உண்மையானதன்மை ஒரு திறத்தவரினால் கேள்விக்குட்படுத்தப்படுமிடத்து, அத்தகைய திறத்தவர் அதன்

உண்மையான தன்மையைக் கேள்விக்குட்படுத்துவதற்கான காரணத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம் அதனைப் பதிதலும் வேண்டும்.

(3) ஆவணத்தின் எண்பிப்புப்பற்றிய சான்று நெறிப்படுத்தப்பட்டபின்னர் நீதிமன்றம் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், ஆவணத்தைக் கேள்விக்குட்படுத்திய திறத்தவர், நற்காரணங்களுக்காக நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, வரிவிதிக்கப்பட்ட செலவுதொகைகளுடன் சேர்த்து, ஆவணத்தை எண்பித்தலில் உறப்பட்ட செலவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 774 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 774 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(3) மேன்முறையீட்டு நீதிமன்றமொன்றினால் இப்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட தீர்ப்பு, கட்டளை அல்லது பணிப்புரை ஒன்று, மேன்முறையீடானது அந்தத் தொடக்க நீதிமன்றத்திலிருந்து செய்யப்பட்டதோ அந்தத் தொடக்க நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பு, கட்டளை அல்லது பணிப்புரை ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முடிவுறாதுள்ள வழக்குகள் இச்சட்டத்துக்கு அமைந்தனவாதல்.

**18**. மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டவையும் ஆனால் அவை தொடர்பில் விளக்கத்துக்கான தேதியெதுவும் நிர்ணயிக்கப்பட்டிராதவையுமான எல்லா வழக்குகளும் கருமங்களும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்றுள்ளவாறான ஏற்பாடுகளுக்கு அமைந்தனவாதலும் வேண்டும்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத் துக்கான முதலாம் அட்டவணை யைத் திருத்துதல்.*

(1) அச்சட்டவாக்கத்தின் படிவம் இல. 7 ஐ உடனடுத்து அதன் படிவம் இல. 7அ என்பதாகப் பயனுற வேண்டிய பின்வரும் படிவத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"**படிவம் 7அ** *(பிரிவுகள் 27 மற்றும் 393)*

***சட்டப் பிரதிநிதியைப் பெயர்குறித்து நியமிக்கின்ற நிருபத்தின் படிவம்***

*................................................ மாவட்ட நீதிமன்றத்தில்*

*வழக்கில். ................................................*

*(வழக்காளி/எதிராளி/மனுதாரர்/எதிர்வாதி/சேர்க்கப்படுவதற்கு/பதிலீடு செய்யப்படுவதற்கு நாடுகின்ற திறத்தவர்) ................................................ ஆகிய நான் பின்வருவோரை, அதாவது:*

*முந்துரிமை இல. 1. .................... என்னுமிடத்தைச் சேர்ந்த (முகவரி) ........... என்பவரை (பெயர்)*

*2. ........................ என்னுமிடத்தைச் சேர்ந்த (முகவரி) ......................... என்பவரை (பெயர்)*

*3. ...................... என்னுமிடத்தைச் சேர்ந்த (முகவரி) .......................... என்பவரை (பெயர்)*

*இவ்வழக்கு இறுதியாகத் தீர்மானிக்கப்படுமுன்னர் நான் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கத்துக்காக எனது சட்டப் பிரதிநிதியாக இத்தாற் பெயர்குறித்து நியமிக்கின்றேன் என்பதுடன், மேற்கூறப்பட்டவாறாக எனது இறப்பு ஏற்படும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காக எனது சட்டப் பிரதிநிதியாக மேலே தரப்பட்டுள்ள முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் இத்தால் மேலும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.*

1. ..................................என்னுமிடத்தைச் சேர்ந்த .................................... ஆகிய நான் மேற்படி நியமனத்துக்குச் சம்மதமளிக்கின்றேன்.

......................................
**கையொப்பம்**

ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்திய ஆணையாளராகவுள்ள ...................... என்னுமிடத்தைச் சேர்ந்த ...................... ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட /இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக்காட்டப்பட்டு விளக்கப்பட்ட மேலே பெயர்குறிப்பிடப்பட்ட ஆள், 20......... ஆம் ஆண்டு...................... மாதம் ...................... ஆந்நாளாகிய இன்று................. இல் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப்படுத்துகின்றேன்.

......................................
**கையொப்பம்**

**சட்டத்தரணி/சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்**

2. ...................... என்னுமிடத்தைச் சேர்ந்த ...................... ஆகிய நான், மேற்படி நியமனத்துக்குச் சம்மதமளிக்கின்றேன்.

......................................
**கையொப்பம்**

ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்திய ஆணையாளராகவுள்ள ...................... என்னுமிடத்தைச் சேர்ந்த ......................ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட/இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக்காட்டப்பட்டு விளக்கப்பட்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள், 20............ ஆம் ஆண்டு................... மாதம் ...................... ஆந்நாளாகிய இன்று ................. ......... இல் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப்படுத்துகின்றேன்.

......................................
**கையொப்பம்**

***சட்டத்தரணி/சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்***

*3. ...............என்னுமிடத்தைச் சேர்ந்த ............. ஆகிய நான் மேற்படி நியமனத்துக்குச் சம்மதமளிக்கின்றேன்.*

......................................

***கையொப்பம்***

*ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்திய ஆணையாளராகவுள்ள ......................என்னுமிடத்தைச் சேர்ந்த ......................ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட /இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக்காட்டப்பட்டு விளக்கப்பட்ட மேலே பெயர்குறிப்பிடப்பட்ட ஆள், 20......... ஆம் ஆண்டு...................... மாதம் ...................... ஆந்நாளாகிய இன்று ................ ................ இல் தனது கையொப்பத்தை என்முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப்படுத்துகின்றேன்.*

......................................

***கையொப்பம்***

***சட்டத்தரணி/சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்***

***கையொப்பம்*** : ......................

*வழக்காளி/ எதிராளி/ திறத்தவர் / உரிமைக்கோரிக்கையாளர் / அவசியமான திறத்தவர்/சேர்க்கப்பட்ட/பதிலீடுசெய்யப்பட்ட திறத்தவர்)*

*ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்திய ஆணையாளராகவுள்ள ....................... என்னுமிடத்தைச் சேர்ந்த ....................... ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட /இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக்காட்டப்பட்டு விளக்கப்பட்ட மேலே பெயர்குறிப்பிடப்பட்ட ஆள், 20 ......... ஆம் ஆண்டு ....................... மாதம் .................. ஆந்நாளாகிய இன்று ................ .........இல் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப் படுத்துகின்றேன்.*

......................................

***கையொப்பம்*** .".

(2) அதன்கண் காணப்படுகின்ற தீர்வைப்படிவத்தை (இல.41) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன் மூலமும்:-

"**தீர்வைப் படிவம்** *(பிரிவு 188)*

| |
|---|
| நீதிமன்றம் |
| வழக்கிலக்கம் |
| வழக்காளி (கள்) |
| எதிராளி (கள்) |
| தீர்ப்புத்தேதி |
| இத்தீர்வையினால் வழங்கப்பட்ட தனிசு நட்டஈட்டுத்தொகை, வட்டி அல்லது வேறு நிவாரணம் (எத்திறத்தவரின் சார்பில் மற்றும் எத்திறத்தவருக்கெதிராக நிவாரணம் வழங்கப்படுகின்றதோ அத்திறத்தவரைக் குறித்துரைக்கவும்) |
| செலுத்தப்படற்பாலனவான செலவுதொகைகளின் தொகை: ரூபா. ......../ வரிவிதிக்கப்படவேண்டிய செலவுதொகைகள் |
| ஆதனத்தின் விவரணம் (ஏதேனுமிருப்பின்) (விவரணமானது, பதிவேட்டில் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்குரையில் அல்லது ஆவணத்தில் உள்ள விவரணத்துடன் தொடர்பானதாக இருக்கமுடியும்) |
| நீதிபதியின் கையொப்பம் |
| இலச்சினை |

.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**20.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்